1970 செப்டம்பர் 3]

உதவிப் பொறியாளரும் பார்வையிட்டனர். 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலேயே மதகுகள் அனைத்தும் சிமிட்டியினால் காரை பூசப்பட்டு மூடப்பட்டிருப்பதால் எந்த மதகின் வாயிலாகவும் தண்ணீர் வெளியேற இயலாது. விரிவான பரிசிலனைக்குப் பின்னர் ஏரி நீர் வெளியேற்றப்படுவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று பொதுப்பணித்துறை அலுவலர்கள் அறுதியிட்டனர்.

DR. H. V. HANDE: Sir, is it not a fact that the former Chief Minister made representations and also gave a press statement that he had received a complaint from a responsible farmer that water from the Red Hills lake solely intended for the City's drinking water purposes had been illegally let out for irrigation for five or six days in January 1969? Also, whether after the statement of the former Chief Minister, the matter was thoroughly investigated and whether the Government are satisfied that there is no basis for the complaint made in that regard?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: It is a fact that the former Chief Minister, Thiru Bhaktavatsalam, made that statement. But on investigation, it was found that the complaint was baseless.

சாலைப் போக்குவரத்து வாரியம்

* 179. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப் பாரா—

தமிழ்நாடு அரசுக்கு சாலைப் போக்குவரத்து வாரியம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. சு. துரைசாமி: நம்முடைய மாநில அரசு ஆண்டு ஒன்றுக்கு 350 மைல்களைத்தான் அரசாங்க ரோடாக ஏற்றுக்கொள்ளுகிறது. அப்படி எடுத்துக்கொள்ளும் நிலையில் எல்லா ரோடுகளையும் எடுத்து போடுவதில் நீண்ட காலம் ஆகும். ஆகவே, இதற்குத் தனிக் கார்ப்பரேஷனை ஏற்படுத்தி எல்லா ரோடுகளையும் அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி சாலைப் போக்குவரத்துக்கு வாரியம் அமைப்பது குறித்து அரசுக்கு உத்தேசம் உண்டா என்பது. உத்தேசம் இல்லை என்று சொன்னேன். 350 மைல்களுக்கு அதிக மாகவும் அரசு சாலைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

டில்லி—கன்னியாகுமரி தேசீய நெடுஞ்சாலை

*180. வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டில்லியையும்—கன்னியாகுமரியையும் இணைக்கும் தேசீய நெடுஞ்சாலை அமைக்கும் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) ஆம் என்றால், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆக்ரா, ஜான்சி, நாகபுரி, ஹைதராபாத், பெங்களூர், கிருஷ்ணகிரி, சேலம், மதுரை, திருநெல்வேலி வழியாக கன்னியாகுமரி—டில்லியை இணைக்கும் தேசீய நெடுஞ்சாலை ஒன்று ஏற்கெனவே உள்ளது. தமிழ் நாட்டில் அமைந்துள்ள மேற்படி சாலையின் ஒரு பகுதி 7-வது தேசீய நெடுஞ்சாலையின் அதாவது காசி—கன்னியாகுமரி சாலையின் ஒரு பகுதியாகும்.

(இ) இவ் வினுவிற்கிடமில்லை.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that Kanyakumari has assumed greater tourist attraction especially after the installation of the statue of Swami Vivekananda on the rock there, will the State Government adopt a different approach? Also, when are the Government going to accomplish the task of improving the National Highway and making it a beautiful highway so that more people can travel and visit places of tourist importance?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : There is no question of changing the approach of the State Government. The Central Government should change their approach.

திருப்பூர் நகரில் பயணியர் விடுதி

*181. வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் பொதுப்பணித்துறையில் பயணியர் விடுதி ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் நகரில் ஏறத்தாழ 1½ லட்சம் மக்கள் இருக்கிறார்கள். திருப்பூர் ரயில் நிலையத்திலிருந்துதான் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை போன்ற இடங்களுக்குப் போக முடியும். அப்படிப்பட்ட அந்த இடத்தில் பொதுப்பணித் துறையினரின் பயணிகள் விடுதி இல்லாத காரணத்தால் அரசாங்க ஊழியர்களும், அமைச்சர்களும் அங்கு தங்குவதற்கு முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டிலேயே அங்கு ஒரு பயணிகள் விடுதியைக் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது போல் திருப்பூரில் இருந்துதான் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டைக்குப் போக வேண்டுமென்ற அவசியமில்லை. கோவைக்குச் சென்று அங்கிருந்து சவுகரியமாகப் போக வசதி இருக்கிறது. இருந்தாலும் உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் அடிப்படையில் அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.